# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TERM TEST - II ( 2017-2018 )

**CLASS : X**

| Maximum Marks : 80 | **TAMIL** | Time : 3 hours |
|---|---|---|
| மதிப்பெண்கள் : 80 | | நேரம் : 3 மணி |

# தமிழ்

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION | **: A** | Reading Comprehension | 15 | Marks |
| பிரிவு | **: அ** | படித்தல் (உரைநடைப்பகுதி ) | 15 | மதிப்பெண்கள் |
| SECTION | **: B** | Writing | 14 | Marks |
| பிரிவு | **: ஆ** | எழுதுதல் | 14 | மதிப்பெண்கள் |
| SECTION | **: C** | Grammar | 15 | Marks |
| பிரிவு | **: இ** | இலக்கணம் | 15 | மதிப்பெண்கள் |
| SECTION | **: D** | Literature / Textbooks | 36 | Marks |
| பிரிவு | **: ஈ** | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்கள் | 36 | மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.
★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
★ வினாத்தாள் 10 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி - அ

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

மரங்கள் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரண் எனக் கூறலாம்.மரங்கள் மண்வளத்தைப் பேணிக் காக்கிறது. மரங்கள் பகலில் உயிர் காற்றை நமக்குத் தருகின்றன. புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன. ஆனால் மனிதர் சுயநலத்திற்காக மரங்களை வெட்டி அதிலிருந்து காகிதம், இரப்பர், கோந்து,மற்றும் மேஜை, நாற்காலி போன்ற அழகிய மரப் பொருட்களை செய்து விற்கிறார்கள். இதனால் மனிதர்கள் எதிர்கொள்ளப்போகும் துயரங்கள் ஏராளம். அசோகச் சக்கரவர்த்தி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரத்தின் அருமையை உணர்ந்து சாலையின் இரு மருங்கிலும் எண்ணற்ற மரங்களை நட்டார்.எனவே நாமும் மரம் வளர்ப்போம். அரசாங்கமே ஒருவர் பத்து மரம் வளர்க்க வேண்டும் என சொல்கிறது. மரங்கள் மனிதருக்கு மட்டுமல்லாமல் எண்ணற்ற உயிர்களுக்கும் அரணாக உள்ளது. மரங்கள் பல மருத்துவ குணம் வாய்ந்தவை.

<u>**வினாக்கள்**</u> **5 x 1 = 5**

**1. நம் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் அரணாக விளங்குவது _______.**

அ ) கால்நடைகள்

ஆ) விலங்குகள்

இ ) பறவைகள்

ஈ ) மரங்கள்

**2. மரங்கள் __________ .**

அ ) புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன.

ஆ) சூரியனின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன.

இ ) கடலின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன.

ஈ ) சந்திரனின் குளிர்ச்சிக்குக் காரணமாக விளங்குகின்றன.

**3. மரங்கள் பகலில் _____________ நமக்கு தருகின்றன.**

அ ) கரியமில வாயுவை

ஆ) உயிர்காற்றை

இ ) நைட்ரஜன் வாயுவை

ஈ ) ஹைட்ரஜன் வாயுவை

**4. சாலையின் இரு மருங்கிலும் மரங்களை நட்ட அரசன் __________.**

அ ) சந்திர குப்த மௌரியர்

ஆ) தசரத சக்கரவர்த்தி

இ ) அசோகச் சக்கரவர்த்தி

ஈ ) இராஜராஜச் சோழன்

**5. அரசாங்கமே ஒருவர் ______________ வளர்க்க வேண்டும் என சொல்கிறது.**

அ ) நூறு மரங்கள்

ஆ) ஆயிரம் மரங்கள்

இ ) பத்து மரங்கள்

ஈ ) பல்லாயிரம் மரங்கள்

**2)** தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம், தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர். புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர். பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பம் கண்டனர்.நாகரிகமும்,பண்பாடும் மிக்கவாகக் தமிழர் வாழ்ந்தனர்

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

1. **ஈந்து உவந்து இன்பம் கண்டவர்கள் ___________.**

   அ ) ஐரோப்பியர்கள்

   ஆ) தமிழர்

   இ ) கிரேக்கர்

   ஈ ) ஈப்ரு இனத்தவர்

2. **தமிழர் நாகரிகமும் ___________ மிக்கவராகத் திகழ்ந்தனர்.**

   அ ) பண்பாடும்

   ஆ) பழக்கமும்

   இ ) பெருந்தன்மையும்

   ஈ ) வீரமும்

3. **தமிழர் _________ கல்வியின் முடிவெனப் போற்றினர்.**

   அ ) சான்றோன் ஆதலே

   ஆ) ஆரம்பக் கல்வி கற்றலே

   இ ) புகழ் பட வாழ்தலே

   ஈ ) பழியின்றி வாழ்தலே

4. **தமிழர், வினையை ___________ உயிராகக் கருதினர்.**

   அ ) பெண்கள்

   ஆ) ஆடவர்

   இ ) சான்றோர்

   ஈ ) கற்றவர்

5. **தமிழர் புகழெனில் ___________ கொடுக்க முனைந்தனர்**

   அ ) கல்வியும்

   ஆ) செல்வமும்

   இ ) வீரமும்

   ஈ ) உயிரையும்

3) **கீழுள்ள உரைநடையைப் படித்து, அதன்திரண்ட கருத்தைச் சுருக்கி எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.** **1 x 5 = 5**

இயல்பாகவே மனிதர்கள் கூடி வாழும் இயல்பு படைத்தவர்கள் ஆயினும் சாதி சமய மாநில வேற்றுமைகள் அவர்களைப் பிரித்து விடுகின்றன. இப்பிரிவினை பிறர் ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும். காந்தி அடிகள் ஒன்றுபட்ட பாரதத்தை உருவாக்கினார்.மீண்டும் அவ்வொற்றுமையை நிலை நாட்டவும் உலக கண்களில் இந்தியா உயர்வு பெறவும், பாதுகாப்பு வலிமை பெறவும் மாணவர்கள் பாடுபட வேண்டும்.தொழில், வாணிகம், கல்வி போன்ற துறைகளில் முன்னேறவும் மாணவர்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும்.விடுதலை பெற்ற இந்திய மக்களின் எதிர்காலக் கனவை நனவாக்க மாணவர்கள் இடையறாது இருக்கப் பாடுபட வேண்டும். அப்போது தான் ஒரு மாநில மாணவர் பிற மாநிலங்களுக்குச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படும். ஒற்றுமை மிகும். வெளிமாநிலங்களிலிருந்து வரும்

பயணிகளை வரவேற்று அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் மாணவர் கடமையாகும். நாட்டின் பிற பகுதிகளில் வெள்ளம், வறுமை போன்ற கொடுந் துன்பங்கள் ஏற்பட்டால் நிதி திரட்டி அனுப்பலாம். அப்போது நாட்டு மக்களிடையே அன்பும் உறவும் பெருகி ஒற்றுமை உணர்வு ஏற்படும்.

## பகுதி - ஆ

**1 x 6 = 6**

4 ) செயற்கரிய செய்த தோழன் / தோழியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

( அல்லது )

பருவமழை பாதிப்பால் நீராதாரங்களில் நீர் இருப்பு குறைவதால் கிணறுகளைத் தூர் வாரி குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் வரைக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி**

கலைவாணன் / கலைவாணி , 12, வள்ளுவர் தெரு, திருமூலர் காலனி ,
காரைக்கால், புதுவை மாவட்டம்.

**1 x 8 = 8**

5 ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

1. முன்னுரை - ஒற்றுமை - வலிமை - முன்னேறிய நாடுகள் - நம் நாட்டின் விடுதலை - அடித்தளம் - வெற்றி வாய்ப்புகள் - ஒன்று பட்டால்உண்டு வாழ்வு - முடிவுரை
2. முன்னுரை - சுற்றுச்சூழல் - சுகாதாரம் - தனி மனித சுத்தம் - வீடு - தூய்மையானால் - நோய்கள் வராமல் தடுக்க - மாசு நீக்குவோம் - முடிவுரை
3. முன்னுரை - நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - நோய் வரக் காரணம் - இந்தியாவை அச்சுறுத்தும் நோய்கள் - தீர்க்கும் முறை - முடிவுரை.

## பகுதி - இ

6 ) **சான்று தருக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

1. **ஈற்றில் வரும் ஐகாரக்குறுக்கம்**

அ) ஐம்பது
ஆ) தலைவன்
இ) வளையல்
ஈ ) கடலை

2. **தெரிநிலை வினைமுற்று**

அ) பொன்னன்
ஆ) உழுதான்
இ) கண்ணன்
ஈ) ஆதிரையான்

3. **அச்சம் பொருளில் வரும் அடுக்குத்தொடர்**

அ) போ போ

ஆ) வருக வருக

இ) தீ தீ தீ

ஈ) கோடி கோடி கோடி கோடியே

4. **உவமை**

அ) மலரடி

ஆ) முகமதி

இ) பாதமலர்

ஈ) தமிழ்த்தேன்

5. **திரிதல் விகாரம்**

அ) வாழைப்பழம்

ஆ) மரவேர்

இ) பொற்குடம்

ஈ ) சாரைப்பாம்பு

7 ) **நிரப்புக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

1. **செம்மொழி - __________ விதிப்படி புணர்ந்தது**

அ) ஈறுபோதல்

ஆ ) ஆதிநீடல்

இ) இனமிகல்

ஈ) தன்னொற்றிரட்டல்

2. **___________ என்பது சிறுபொழுது ஆகும்.**

அ) கார்காலம்

ஆ) குளிர்காலம்

இ) வைகறை

ஈ ) பின்பனிக்காலம்

3. **பாலை நிலத்திற்குரிய தெய்வம் ___________.**

அ) கிளி, மயில்

ஆ) நாரை, அன்னம்

இ) புறா, பருந்து

ஈ ) கோழி, கடற்காகம்

4. நிரைகவர்தல் என்பது __________.

இ) கரந்தை

ஆ) வெட்சி

இ) உழிஞை

ஈ ) பெருந்திணை

5. பொருந்தாக் காமம் ________ வகைப்படும்.

அ) இரண்டு

அ) மூன்று

இ) நான்கு

ஈ) ஐந்து

8 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1. மருதம் ( திணைக்குரிய பறை எது )

அ) தொண்டகம்

ஆ) ஏறுகோட்பறை

இ) மணமுழா

ஈ ) துடி

2. மேற்கு + நாடு ( சேர்த்து எழுதுக )

அ) மேற்கு நாடு

ஆ) மேநாடு

இ) மேனாடு

ஈ ) இவற்றில் எதுவுமன்று

3. குறிஞ்சி ( நிலத்திற்குரிய நீர் எது? )

அ) சுனைநீர்

ஆ) காட்டாறு

இ) பொய்கை

ஈ ) மணற்கிணறு

4. ஆயர் ஆய்ச்சியர் ( மக்களுக்குரிய நிலத்தினை எழுதுக )

அ) பாலை

ஆ) குறிஞ்சி

இ ) மருதம்

ஈ ) முல்லை

5. வெற்றி பெற்ற மன்னன் ( சூடி மகிழும் பூவினை எழுதுக )

அ) வெட்சிப் பூ

ஆ) வாகைப்பூ

இ) தும்பைப்பூ

ஈ) உழிஞைப்பூ

9 ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1. ஆண்மகனின் ஒழுகலாறுகள்

அ) வெட்சித்திணை

ஆ) குறிஞ்சித்திணை

இ) பாலைத்திணை

ஈ) பாடாண்திணை

2. ஆனி, ஆடி

அ) கார்காலம்

ஆ) முன்பனிக்காலம்

இ) இளவேனிற்காலம்

ஈ) முதுவேனிற்காலம்

3. வடகிழக்கு

அ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

ஆ) திசைப்பெயர்ப் புணர்ச்சி

இ) மகரஈற்றுப் புணர்ச்சி

ஈ) குற்றியலுகரப் புணர்ச்சி

4. வேய்தோள்

அ) தொகையுவமை

ஆ) உவமை

இ) உவமேயம்

ஈ) உவமஉருபு

5. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ ?

அ) அறியா வினா

ஆ) ஐய வினா

இ) அறிவினா

ஈ) ஏவல்வினா

10 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும்)** **3 x 1 = 3**

1. அ) வினாவையே விடையாகக் கூறுவது வினாஎதிர்வினாதல் விடை ஆகும்.
   ஆ ) வினாவையே விடையாகக் கூறுவது உற்றதுரைத்தல் விடை ஆகும்.
   இ ) வினாவையே விடையாகக் கூறுவது உறுவதுகூறல் விடை ஆகும்.
   ஈ ) வினாவையே விடையாகக் கூறுவது மறை விடை ஆகும்.

2. அ) ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது இனமிகல்
   ஆ) ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது ஒன்றொழி பொதுச்சொல்
   இ) ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது ஒருபொருட் பன்மொழி
   ஈ ) ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது வெளிப்படை

3. அ) முற்றுபெறாத பெயர்ச்சொற்கள் எச்சம் எனப்படும்
   ஆ) முற்றுபெறாத வினைச்சொற்கள் எச்சம் எனப்படும்
   இ) முற்றுபெறாத இடைச்சொற்கள் எச்சம் எனப்படும்
   ஈ ) முற்றுபெறாத உரிச்சொற்கள் எச்சம் எனப்படும்

4. அ) குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் முருகன்
   ஆ) குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் திருமால்
   இ) குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் இந்திரன்
   ஈ) குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் வருணன்

5. அ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது பொதுவியல் திணை.
   ஆ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது கைக்கிளை திணை.
   இ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது தும்பைத் திணை.
   ஈ ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது வஞ்சித் திணை.

## பகுதி - ஈ

11) **பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

ஒருமுறை இயேசுநாதரின் மலைச்சொற்பொழிவைப் பற்றிய நூலைப் படித்தார்.தீயவனை எதிர்க்காதே, அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில். பகைவனிடமும் அன்பு பாராட்டு என்னும் கருத்துகள், காந்தியடிகளின் மனதில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின. பகவத்கீதையைப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார். உருசிய அறிஞர் தால்சுதாய் எழுதிய, "உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு" என்னும் நூல் அவருள் தாக்கத்தினை ஏற்படுத்தியது. தால்சுதாய், தம்நூலில் " இன்னா செய்தார்க்கும் " என்னும் திருக்குறளையே மொழிபெயர்த்து எழுதி யிருந்தார்.அதனைப் படித்த காந்தியடிகள் திருக்குறள் மீதும், தமிழ் மீதும் பற்றுக் கொண்டார். அன்பு,உண்மை, உறுதி, இன்னா செய்யாமை ஆகிய உயர் பண்புகள் அவருக்கு இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்தன.

**வினாக்கள்** 5 x 1 = 5

1. இயேசுவின் மலைச்சொற்பொழிவு நூலைப்படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன ?
2. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்த உயர்பண்புகள் யாவை ?
3. காந்தி எவ்வாறு மனவுறுதியைப் பெற்றார் ?
4. உருசிய அறிஞர் யார் ? அவர் எழுதிய நூல் எது ?
5. காந்தியடிகள் திருக்குறள் மீதும், தமிழ் மீதும் பற்றுக் கொள்ள காரணம் யாது ?

12) **பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பாடலோடு தொடர்புடைய பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

**படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்து**
**அடிவ ணங்கிய காரண வதிசயம் அதனால்**
**உடைய வன்திருத் தூதரே உண்மையென் றுன்னித்**
**தினமு டைத்தநெஞ் சாயினர் அறிவினில் தெளிந்தோர்.**

**வினாக்கள்** 4 x 1 = 4

1. **இப்பாடல் இடம் பெற்ற நூல் ________.**
   அ) சீவக சிந்தாமணி
   ஆ) சிலப்பதிகாரம்
   இ) சீறாப்புராணம்
   ஈ ) பெரிய புராணம்
2. **இப்பாடலின் ஆசிரியர் ________.**
   அ) குமரகுருபரர்
   ஆ) திருநாவுக்கரசர்
   இ) பாரதியார்
   ஈ ) உமறுப்புலவர்
3. **உன்னி - என்னும் சொல்லின் பொருள் ________.**
   அ) மன்னித்து
   ஆ) நினைத்து
   இ) பார்த்து
   ஈ ) சேர்த்து

4. **மேற்கண்ட வரிகள் உணர்த்தும் பொருள் ________.**

அ) முகமது நபியை புலி பார்க்கவில்லை

ஆ) புலி மாமிசத்தை உண்டு உறங்கியது

இ) முகமது நபியைப் பார்த்ததும் புலி ஓடியது

ஈ ) முகமது நபியை புலி வணங்கியதால் அனைவரும் முகமதுநபியை இறைதூதர் என்று உணர்ந்தனர்.

13) **பின்வரும் திருக்குறள்களில் விடுபட்ட சொல்லை நிரப்பி எழுதுக.** **4 x ½ = 2**

1. இடிப்பாரை ________ ஏமரா மன்னன்
________ இலானுங் கெடும்.

2. அறனீனும் __________ ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த ________.

14) **எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

1. கங்கையின் மறுகரையை அடைந்த குகனிடம் இராமபிரான் கூறியது யாது ?
2. சொல்லேருழவர் எவ்வாறு உழவு செய்கின்றனர் ?
3. பொருளின் சிறப்பு யாது ?
4. இறைவன் திருவடியை வணங்குகின்றவர் எத்தன்மையர் என திருநாவுக்கரசர் கூறுகிறார்?

15) **எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக.** **2 x 5 = 10**

1. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?
2. தமிழரின் இசைக்கலை குறித்து எழுதுக.
3. தமிழரின் விண்ணியல் அறிவு குறித்து எழுதுக.
4. கருத்துப்படம் குறித்து விளக்கி எழுதுக.
5. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்து எழுதுக.

16) **பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 7 = 7**

1. பரிதிமாற்கலைஞரைப் பற்றிச் சுருக்கி எழுதுக.
2. தொல்லியல் துறை பற்றி எழுதுக.
3. குறட்டை ஒலி கதையில் வரும் இருவேறு குடும்பங்களின் இயல்பினை விளக்குக.